2005 பிப்ரவரி 3]

23—

மாணவர் விடுதி

***37780—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பேரூர் பகுதிக்குட்பட்ட பகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில், பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்குப் புதியதாக விடுதிகள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுயில் அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் மொத்தம் 19,000 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அவர்களில் 11,000 ஆண்களும் 8,000 பெண்களும் படித்து வருகின்றார்கள். நாட்ராம்பள்ளி பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதி. இந்தப் பகுதியில் வசித்து வரும் மாணவிகளுக்கும் தனியாக ஒரு விடுதி அமைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய நாட்ராம்பள்ளியில், ஏற்கெனவே அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இருக்கின்றது. ஒப்பளிக்கப்பட்ட 50 மாணவர்கள் சேர்க்கைக்கு, 45 மாணவர்கள் மட்டும்தான் இப்போது விடுதியில் சேர்ந்து இருக்கிறார்கள். எனவே, புதிய விடுதி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன்

[2005 பிப்ரவரி 3

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியும் புதுப்பேட்டையில் தனியார் கட்டடத்தில் எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாமல் இயங்கி வருகிற காரணத்தால், மாணவர்கள் சேருவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதேசமயத்தில், கடந்த 3 ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், நிதி ஒதுக்கீடு செய்தும் இந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படவில்லை. இந்த நிதி ஆண்டிலாவது கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்கிறபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவ மாணவியருக்கான மொத்த விடுதிகள் 972-ல் 202 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வந்தன. 770 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்ததை மனதில் வைத்துக் கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கிவந்த விடுதிகளில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லை என்பதை அறிந்து கொண்டு, நிதிநிலைமை சிறப்பாக இல்லாவிட்டாலும்கூட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய மாணவச் செல்வங்களுடைய வாழ்வு நலம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் 770 தனியார் விடுதிகளில் இன்றுவரை 314 விடுதிகளுக்கு அரசு கட்டடங்கள் கட்ட உத்தரவு வழங்கி, சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருகின்ற ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியில் அந்தத் தனியார் கட்டடத்தில் இயங்கும் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.